நிரந்தரமான அரசாணை பிறப்பிக்கப்பட்டதோ, அதேபோன்று, ரேக்ளா பந்தயத்தை நடத்துவதற்கு தற்போது PETA போன்ற அமைப்புகள் தடை செய்ய வலியுறுத்திக்கொண்டிருப்பதால், அந்த வீர விளையாட்டை, ஜல்லிக்கட்டைப் போன்றே நிரந்தரமாக நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசைப் பொறுத்தவரை, ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடத்த வேண்டும் என்பதற்காக பல்வேறு வகைகளில் போராட்டம் நடத்தி இன்றைக்கு அதிக அளவில் ஜல்லிக்கட்டைப் பாதுகாப்பாக நடத்தி, இந்திய அரசாங்கத்தினுடைய பாராட்டுதல்களைப் பெற்றிருக்கிற மாநிலம் என்று சொன்னால், அது தமிழகம் என்கிற ஒரு வரலாற்றை நாம் படைத்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரேக்ளா பந்தயத்திற்கும் அதுபோன்று ஓர் அரசாணை வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். துறை ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எடுத்துரைக்கப்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**139—**

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***4972—திரு. தூசி கே. மோகன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யாறு தொகுதி, வெம்பாக்கத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

*2018 ஜூன் 6]*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதி, வெம்பாக்கத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.*

**திரு. தூசி கே. மோகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களை அன்புடன் வணங்குகிறேன். செய்யாறு தொகுதி, வெம்பாக்கம் வட்டத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா என்று கோரியிருந்தேன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்று ஒரே வரியில் பதில் சொல்லிவிட்டார்கள். தயவுகூர்ந்து அந்தப் பகுதி மக்களின் நலன் கருதி மீண்டும் ஒரு பதிலை எதிர்பார்த்து அமைகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதி, வெம்பாக்கத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் தூசி ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும், 15 கிலோ மீட்டர் தொலைவில் செய்யாறு ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும் செயல்பட்டு வருகின்றன. வெம்பாக்கத்தின் அருகில் இவ்வளவு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருவதால், அப்பகுதியில் உள்ள விவசாயிகள் மேற்காணும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மேலும், செய்யாறு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தூசி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 4 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 கிட்டங்கிகள் நபார்டு வங்கி நிதியுதவிடன் நம்முடைய*

விவசாயிகளின் காவலனாக இருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அமைக்க ஆணையிடப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டுள்ளன என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அவருடைய கோரிக்கை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலனை செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.

**திரு. தூசி கே. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களையெல்லாம் வாழ வைத்த இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொன்னடிகளை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்கி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் அன்போடு வணங்குகிறேன்.

எனது செய்யாறு தொகுதிக்குட்பட்ட வெம்பாக்கம் ஒன்றியத்திற்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் வேண்டுமென வினா தொடுத்திருந்தேன். மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் என்னுடைய கோரிக்கையை ஏற்று, செய்யாறு தொகுதி, வெம்பாக்கம் வட்டத்திற்கு உள்ளடங்கிய தூசி ஊராட்சியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தைத் துவங்கிட 480 இலட்சம் ரூபாய் நிதி வழங்கி, ஆணை பிறப்பித்துள்ளார் (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் காவலனாக, ஏழைகளின் ஏந்தலாக விளங்குகின்ற, தமிழ்நாடு முதலமைச்சர் எங்கள் அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனது தொகுதி மக்களின் சார்பிலும், என்னுடைய சார்பிலும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செய்யாறு தொகுதி, தூசி ஊராட்சியில் மிகவும் பழமையான குடியிருப்புகளாக உள்ள உதவி வேளாண்மை அலுவலர் குடியிருப்புகளை Assistant Agriculture Officers' Quarters-ஐ புதிய கட்டடங்களாக அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*2018 ஜூன் 6]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய குடியிருப்புகள் கட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் உறுப்பினரின் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்து, தேவைப்படின்' நிதியாதாரத்தைக் கணக்கில் கொண்டு, வருங்காலங்களில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**140—**

### வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம்

***9631—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:**

*மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு 279.51 இலட்சம் ரூபாய் அளவில் திட்ட மதிப்பீடு பெறப்பட்டுள்ளது. புதிய கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*